பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 06 2026 SATURDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** **Seychelles** உடனான உறவுகளை மேம்படுத்த இந்தியா ஆவலுடன் இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு விதிகளை மீறி செயல்படும் சாயப்பட்டறைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு ராஜூ தெரிவித்துள்ளார்.

**3)** தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக திரு மாணிக்கம் தாகூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**4)** போலியோ சொட்டு மருந்து முகாம் நாளை நடைபெறுகிறது.

**5)** ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rutuja Bosale** - சீனாவின் **Fangran Tian** இணை பட்டம் வென்றது.

. . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>

**Seychelles** உடனான உறவுகளை மேம்படுத்த இந்தியா ஆவலுடன் இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக **Seychelles** சென்றடைந்த பின்னர் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்திய பெருங்கடல் பகுதியில் நட்பு நாடாக **Seychelles** திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

**Seychelles** அதிபர் **Dr. Patrick Herminie-**யுடன் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

**Seychelles** நாட்டின் **50-**ஆவது ஆண்டு சுதந்திர தின விழாவில் திரு நரேந்திர மோடி முக்கிய விருந்தினராக கலந்துகொள்கிறார்.

<<<<<<>>>>>

சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு விதிகளை மீறி செயல்படும் சாயப்பட்டறைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு ராஜு தெரிவித்துள்ளார்.

தென்காசியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சாயப்பட்டறைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீரினால் நிலத்தடி நீர் மாசுபடுவதாகவும், இதனால் பொதுமக்கள் உடல்நலன் பாதிப்புக்கு உள்ளாவதாகவும் தெரிவித்தார்.

சாய ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

சங்கரன் கோவிலில் அனுமதியின்றி இயங்கிய 22 சாயப்பட்டறைகளை மூட தாம் உத்தரவிட்டிருப்பதாகவும் திரு ராஜூ தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நிலத்தின் சந்தை மதிப்பிற்கும், வழிகாட்டு மதிப்பிற்கும் உள்ள இடைவெளியை சரிசெய்வது குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டிருப்பதாக மாநில வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு லோகேஷ் தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது துறையில் புதிய திட்டங்களை செயல்படுத்துவது குறித்து உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் கூறினார்.

நிதிநிலை அறிக்கையில் புதிய திட்டங்கள் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பத்திரப்பதிவில் ஆன்லைன் முறையை முழுமையாக கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக

தெரிவித்த அவர், ஆவணப்பதிவுகளை விரைந்து நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்றும் கூறினார்.

பத்திரப்பதிவுக்கான இணைய கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு லோகேஷ் தமிழ்செல்வன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பிரபல திரைப்பட இயக்குநரும், நடிகருமான கே. பாக்கியராஜின் மறைவுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், திரையுலகத்தினரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்திய திரைப்படத் துறைக்கு சிறப்பான பங்களிப்பை கே. பாக்கியராஜ் அளித்திருப்பதாக கூறியுள்ளார்.

சிறப்பான கதை அமைப்பு, திரைக்கதை உள்ளிட்டவற்றால் நீண்டகாலம் மக்கள் மனதில் நிலைத்திருக்கும் திரைப்படங்களை உருவாக்கியவர் என்று அவர் தெரிவித்துள்ளர்.

கே. பாக்கியராஜின் மறைவு இந்திய திரைப்படத் துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழக திரைப்பட உலகின் முன்னோடி இயக்குநரும், சிறந்த நடிகரும், தனித்துவமான திரைக்கதை ஆசிரியரும், எழுத்தாளருமான கே. பாக்கியராஜின் மறைவு மிகுந்த வேதனை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

நகைச்சுவை, குடும்ப பாசம் மற்றும் சமூக மதிப்புகளை மையமாக கொண்ட பல காலத்தால் அழியாத படைப்புகளை வழங்கி, தமிழ் சினிமாவில் தனக்கென முத்திரையை பதித்தவர் கே. பாக்கியராஜ் என்று கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு விஜய் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழக திரையுலகில் தலை சிறந்த இயக்குநர், நடிகர், திரைக்கதை ஆசிரியர், வசனகர்தா, இசையமைப்பாளர் என பன்முக திறமையால் முத்திரை பதித்த கே. பாக்கியராஜின் மறைவு மிகுந்த அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பாக்கியராஜின் உடல், சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு விஜய், திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு கட்சி தலைவர்களும், திரையுலக பிரபலங்களும் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் அரசு மரியாதையுடன் நாளை நடைபெறும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

போலியோ சொட்டு மருந்து முகாம் நாளை நடைபெறுகிறது.

தமிழகத்தில் **5** வயதிற்குட்பட்ட **52** லட்சத்து **90** ஆயிரம் குழந்தைகளுக்கு, **43** ஆயிரத்திற்கும் மேற்பட்ட மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், ரயில் மற்றும் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இம்முகாம் நடைபெறுகிறது.

<<<<<<>>>>>

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட தகுதித் தேர்வில், குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதாக வந்துள்ள தகவல் அதிர்ச்சி

அளிப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இதுபோன்ற நிகழ்வுகள் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் முறைகேடுகள் மற்றும் ஊழல் நடைபெறுவது குறையவில்லை என்பதை காட்டுவதாக கூறியுள்ளார்.

நடந்து முடிந்த ஆசிரியர் தகுதிதேர்வு முடிவுகளை அரசு முறையாக பரிசீலிக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக திரு மாணிக்கம் தாகூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக, காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பதவியில் இருந்த திரு செல்வப்பெருந்தகைக்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

திருவள்ளூர், சென்னை காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு

மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 55 Sec.*** )

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை சாஸ்திரி நகர் பகுதியில் ஆய்வு மேற்கொண்ட மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன், பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

-----------------

திருப்பூரில் உள்ள கால்நடை பன்முக மருத்துவமனையில் மாநில அமைச்சர் திருமதி கமலி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------

விழுப்புரம் மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் **15** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் விளையாட்டு அரங்கத்தை ஆட்சியர் திருமதி பிரியா ஆய்வு செய்தார்.

--------

தீவிரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்த ராணுவ வீரர் சுடலைமணியின் உடல் அவரது சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் மேலகூட்டுடன்காட்டில் கடலோர காவல்படை வீரர்கள் மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rutuja Bosale -** சீனாவின் **Fangran Tian** இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை **6-3, 6-4** என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Elena Micic — Belle Thompson** இணையை வென்றது.

----------------

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரணவ் செந்தில்குமார் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 6-2 என்ற செட் கணக்கில், பிரான்சின் Theo Hermann-ஐ வென்றார்.

-----------------

ஆசிய கோப்பை வாலிபால் சாம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

அஹமதாபாதில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

-------------------

Smash சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் தகுதி சுற்று இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவின் Yashaswini Ghorphade வெற்றிபெற்றுள்ளார்.

<<<<<<END>>>>>